## செயற்குழுக் கூட்டம் (09-09-2022)

இன்று (09-09-2022) நமது இயக்கத் துணைத்தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், பொது செயலாளர், நான்கு செயலாளர்கள். சட்ட ஆலோசகர் மற்றும் ஒரு சிறப்பு அழைப்பாளரும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

1. சென்ற பொதுக்குழுக் கூட்டம் ஜூலை 10ம் தேதி பாண்டியன் ஹோட்டலில் நடைபெற்றது. அங்கு உறுப்பினர்களின் வருகை மிகவும் (quorum) குறைவாக இருந்ததால், அந்தப் பொதுக்குழுக் கூட்டம் மீண்டும் 04-09-2022 அன்று நமது தலைமை அலுவலகத்தில் நடத்தப்பட்டது. பொதுக்குழுக் கூட்டம் தொடங்கும் போது, திடீரென்று திரு மனுராஜ் அவர்கள் தலைவர் பதவியை ராஜினாமா செய்ததால், அன்றைய பொதுக்குழுவை திரு நபீஸ் அஹமத் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார்.

2. இதைப்பற்றி, நமது இயக்கத்தின் சட்ட ஆலோசகர் கீழ்க்கண்டவாறு கருத்து தெரிவித்தார். “திரு நபீஸ் அவர்கள் தலைமை தாங்கி பொதுக்குழுவை நடத்தினாலும், இயக்கத் துணைவிதிகளின் படி நமது இயக்கத்தின் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியாது: அவரை 04-09-2022 அன்று நடந்த பொதுக்குழுவுக்கு மட்டுமே தலைவராக கருதப்பட வேண்டும். எனவே., இயக்கத்தின் தலைவராக ஒருவரை செயற்குழு இணத்துக்கொள்ளலாம் என கருத்து தெரிவித்தார். .

3. எனவே, காலியாக உள்ள தலைவர் பதவிக்கு, திரு V. கார்த்திகை ராஜன் அவர்கள் திரு ந சுப்ரமனியன் அவர்களைத் தலைவராக முன் மொழிய, துணைத்தலைவர் திரு V ஐயப்பன் அவர்கள் வழி மொழிந்தார். அவரிடம் சம்மதம் பெறப்பட்டு, திரு ந சுப்ரமனியன் அவர்களைத் தலைவராக இணைத்துக்கொள்ள/ **(co opt)** செய்யு ஒரு மனதாக தீர்மானம் நிறைவேறியது.

4. காலியாக உள்ள செயலாளர் (சட்டம்) பதவிக்கு உறுப்பினர் திரு நபீஸ் அஹமத் அவர்களை நியமிக்கக் கோரி தலைமையகச் செயலாளர் திரு ஜெ மனோகர் அவர்கள் முன் மொழிய, பதிப்பக செயலாளர் திரு G கோவிந்த சாமி அவர்கள் வழி மொழிய செயற்குழுவில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேறியது.

5. காலியாக உள்ள செயலாளர் (மக்கள் தொடர்பு) பதவிக்கு உறுப்பினர் திரு குணசேகரன், தஞ்சாவூர் மாவட்டம், அவர்களை நியமிக்கக் கோரி தலைவர் திரு ந. சுப்ரமனியன் அவர்கள் முன் மொழிய, கலைத்தொடர்புச் செயலாளர் திரு சாந்தகுமார் அவர்கள் வழி மொழிய, தொலைபெசி மூலம் திரு குணசேகரன் அவர்களிடம் சம்மதம் பெறப்பட்டு, செயற்குழுவில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேறியது

6. நமது இயக்கம், அமைச்சர் திரு.செந்தில் பாலாஜியை எதிர்த்து உச்ச நீதி மன்றம் சென்று வழக்காடி வெற்றி பெற்றுள்ளதை நினைத்து இந்த செயற்குழு மகிழ்கிறது. இந்த வெற்றிக்குப் பாடுபட்ட நமது தலைவரையும், இலவசமாக வாதாடிய உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் திரு பிரசாந்த் பூஷன், திரு. பிரணவ் சச்தேவா மற்றும் ஜடின் பரத்வாஜ் அவர்களையும் இயக்கத்தின் சார்பாக பாராட்டி நன்றியைத் தெரிவிக்கிறோம்

7. 04-09-2022 அன்று நடந்த பொதுக்குழுவில், தலைவராகப் பொறுப்பேற்றிருந்த திரு K.மனுராஜ் அவர்கள் மன்றத் தகாமைக்கு ஒவ்வாத (unparlimentary words) சில சொற்களை உபயோகித்தது வருத்தமளிப்பதாக உள்ளது. ஊழல் எதிர்ப்பு இயக்கம் என்பது ஒரு மதிப்பு

மிக்க சபையாகும். எனவே இயக்கத்துக்கு களங்கம் வருமாறு எந்த ஒரு செயலும் நிகழக்கூடாது என்பதால், திரு மனுராஜ் அவர்கள் மீது இது குறித்து ஒரு தன்னிலை விளக்கம் கேட்டுக் கடிதம் எழுதுமாறு பொதுச்செயலாளரை நிர்வாகக் குழு கேட்டுக்கொள்கிறது.

8. கீழ்மட்ட மாநிலத் தலைமையும், கிளைகளும், கடந்த மூன்றாண்டுகளாக ஆண்டு வரவு செலவு கணக்குகள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. அலுவலர்களின் முறைப்படியான தேர்தலும் நடத்தப்படவில்லை. குழுக்கூட்டங்கள் நடந்தால், தலைமையகத்துக்கு கூட்டத்தின் தீர்மானங்கள் அனுப்பப்படுவதில்லை. எனவே, மாவட்டங்கள் மற்றும் கிளைகளில் இருந்து இது சம்பந்தமான அனைத்து விபரங்கலையும் பெற பொது செயலாளர் நடவடிக்கை எடுத்து அடுத்த கூட்டத்தில் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இறுதியில் பொதுச் செயலாளர் நன்றியுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

ஒப்பம்-V. ஐயப்பன்
துனைத் தலைவர்

ஒப்பம்-V கார்த்திகை ராஜன்
பொதுச் செயலாளர்